★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 புரட்டாதி 4 ஷவ்வா: 16 இதழ்: 221
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20-9-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
ஃ மிக மலிவாக ஃ அதிவிரைவாக
ஃ வெகு திறமாக ஃ தனிரகமாக
வெளிநாட்டுக் கடதாசியில்
புல்ஸ்காப் பிரதி ரூ. 1/50 மட்டுமே
சுப்பர் கனன்
கொப்பி சேவிஸ்
13, நவீன சந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## அமிர் இன்று ஜமைக்கா பயணம்

லண்டன், செப். 19

இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் 20ம் திகதி பகல் ஜமைக்கா பயணமாகின்ருர்.

21ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச பாராளுமன்ற கூட்டத்தொடரில் திரு. அமிர்தலிங்கம் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

எதிர்க்கட்சித்தலைவருக்கான பாதுகாப்பு, உதவிகள், 20ம் திகதி முதல் இலங்கை அரசினுல் திரு. அமிர்தலிங்கத்துக்கு வழங்கப்படும். (செ)

# மாண்டவர் தொகை 26 000!

தெஹ்ரான், செப். 19

ஈரானின் தபாஸ் நகரில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட ஒரு நிமிடப் பூகம்பத்துக்குப் பலியானவர்களின் தொகை 26 ஆயிரமாக அதிகரித்துள்ளது! இந்த விபரத்தை, இன்று வெளியான ஈரான் பத்திரிகை ஊர்ஜிதம் செய்தது.

பூகம்பத்தினுல் 160 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், தபாஸ் நகரம் தரைமட்டமாகி விட்டதென்றும், கட்டிடங்கள் எதுவுமே இல்லையென்றும் ஸ்தலத்திற்குச் சென்று திரும்பிய நிருபர்கள் தெரிவித்துள்ளனர்.

## நிவாரணப்பணியில் ஈடுபட்ட விமானத்துக்கும் விபத்து!

ஈரானில் ஏற்பட்ட பூகம்பம், இந்த நூற்றுண்டின் மிக மோசமான-பயங்கரப் பூகம்பம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### விமான விபத்து

பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், உயிருடன் ஊசலாடிக்கொண்டிருப்போரைக் காப்பாற்றவும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் அதே நேரத்தில், 'பட்ட காலிலே படும்' என்பதுபோல, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஒரு சபிக்கு விமானம் இன்று காலை விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் பலியாகிவிட்டார்கள்

பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும் மருந்து வகைகளையும் ஏற்றிச்சென்ற விமானப்படையின் சரக்கு விமானம் ஒன்று, இன்று கிழக்கு ஈரானில் தரையிறங்க முயற்சிக்கையில் விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தினுல், விமானப்படையைச் சேர்ந்த ஒரு ஜெனரலும், 4 லெப்டினன்டுகளும் உட்பட ஒன்பது பேர் பலியாஞர்கள்.

### ஜே. ஆர். அனுதாபம்

இலங்கை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஈரான் மன்னர் ஷாவுக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில், இலங்கை அரசாங்கத்தினதும், மக்களினதும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

ரூ. 2,50,00,000 அரிசியுடன்

# கடலில் மூழ்கும் கப்பல்!

(காலி)

பர்மாவிலிருந்து 7,900 தொன் அரிசி ஏற்றிக் கொண்டுவந்த 'டொங்ஜு' எனும் பெயருடைய கப்பல் காலி (வெளித்) துறைமுகத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறது!

சிறிது சிறிதாக கடலில் அமிழ்ந்துகொண்டிருக்கும் இக் கப்பலில் உள்ள அரிசியின் மொத்தப் பெறுமதி இரண்டு கோடியே ஐம்பதுலட்சம ரூபா என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

பாதையொன்றில் மோதிக் கொண்டதால் இந்த விபத்து நிகழ்ந்ததென்று வெளிவந்த செய்திகள் தெரிவித்தன. மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை நேரில்பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் கரையோரப் பகுதியில் திரண்டுநிற்கின்றனர்.

### அமைச்சர்கள் விஜயம்

உணவு. கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு, எஸ். பி. ஹேரத், பிரதிஅமைச்சருடன் நேரில் இங்கு இன்று விஜயம் செய்து, கப்பல் மூழ்கவேண்டியதற்கான காரணங்கள் பற்றிக் கண்டறிந்தனர். இந்த முதலில் விபத்துக்குறித்து பூரணமான விசாரணை நடைபெறும்என்று அமைச்சர் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து கப்பல் தலைவரும், குழுவினரும் நேற்று பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

## அரசுக்கு நன்றி தெரிவித்து சி.பா.மகாசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல்முறை சிறுபான்மைத் தமிழருக்கு கிடைத்த ஒருவரப்பிரசாதமாதம். இதற்காக அரசுக்கு மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொதுக்கூட்டத்தில் மேற்கண்டதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபைக் காரியாலயத்தில், மகாசபைத் தலைவர் திரு. எம் சி. சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## 'அமிர்' பேசிய கூட்டத்தில் ஏற்பட்ட திடீர் சலசலப்பு

லண்டன், செப். 19

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும், எதிர்க் கட்சித்தலைவருமான திரு அ. அமிர்தலிங்கத்துக்கு லண்டனில் வைத்து, இளைஞரொருவரால் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசப்பட்டது.

மான்செஸ்டர் நகரிலுள்ள ஒரு மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, சம்பந்தப்பட்ட இளைஞரால் கண்ணீர்ப்புகைக்குண்டு ஒன்று வீசப்பட்டதைத் தொடர்ந்து, மண்டபத்தில் சிறு சலசலப்பு எற்பட்டுச் சிலர் வெளியேறி

[6-ம் பக்கம் பார்க்க]

சன்சோனி கமிஷன்:

## யாழ். பாடசாலைகள் பற்றி சாட்சியம்

(கொழும்பு)

சன்சோனிக் கமிஷன் முன்பாக நேற்று சாட்சியமளித்த முன்னுள் பரீட்சை ஆணையாளர் திரு. பூகொட பிரேமரத்ன, வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கும், மேற்கு மாகாணப் பாடசாலைகளுக்குமிடையே நிலவும் 'வேறுபாடுகள்' குறித்து விபரமாகக்கூறினுர்.

''வடமாகாணத்தில் பூரண விஞ்ஞான ஆய்வுகூடங்களைக் கொண்ட 34 பாடசாலைகள் இருக்கின்றன, மேற்கு மாகாணத்தில் இவ்விதமாக 33 பாடசாலைகளே உள்ளன' வடமாகாண மக்கள் தொகை 8 லட்சத்து 14,000. மேற்கு மாகாண மக்கள் தொகை 30 லட்சத்து 64,000, யாழ்ப்பாண நகரின் மக்கள் தொகையைக் கவனிக்குமிடத்து தெஹிவளை மக்கள் தொகையை விடக் குறைவாகவே உள்ளது.

1976ல் கொழும்பு தெற்கிலுள்ள பாடசாலைகளில் பதினுேராம் தரத்தில் கல்வி பயின்ற மாணவர் தொகை 1142. கொழும்பு வடக்கில் இதே வகுப்புமாணவர்தொகை1352 ஆனுல் யாழ்ப்பாணத்தில் இதே வகுப்பில் 4023 மாணவர் கல்வி பயில்கின்றனர். 12-வது தரத்தில் கொழும்பு தெற்கில் 1898 மாணவரும் அதேநேரத்தில் யாழ்ப்பாணத்தில் 1319 மாணவரும் கல்வி பயின்றனர், பாடசாலைகளின் தரததைப் பார்க்குமிடத்து மற்றைய மாவட்டங்களைவிட யாழ்ப்பாணமே கூடுதலான வசதிகளைக் கொண்டிருந்தது'' என்று திரு. பூகொட பிரேமரத்ன, சிங்கள மகாஜன பெரமுனை சார்பாக ஆஜரான சட்டத்தரணி திரு, ஹரிச்சந்திர விஜயதுங்கவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர் (ம)

## உபதபால் நிலையக்கொள்ளை: 7 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி உப-தபால் நிலையக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின்பேரில் 7 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்கள்

கொள்ளைச் சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து, திருநெல்வேலிப் பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஹெலிக்கொப்டர் மூலம் தேடுதல் நடத்தினுர்கள். பலர் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து 7 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

திருநெல்வேலி உப-தபால் நிலையத்தில், தபாற்பகுதி அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்கள் இருப்பெடுத்தபோது, 8,022ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

### வீடுகள் சோதனை

பொலிஸார், அப்பகுதியில் இளைஞர் நடமாட்டம் பற்றிப் பலரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். பல வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. வாகனங்கள் சோதனை செய்யப்பட்டன.

டி. ஐ. ஜி. ஹெரத், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ்நிலையங்களுக்கு நேரில் சென்று, பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினுர்.

யாழ். ஆஸ்பத்திரியில் 'பற்ருக்குறை'

## அவசர அறுவைச் சிகிச்சைகள் நடக்கவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் நிலவும் 'பற்ருக்குறை'கள் காரணமாக நேற்றுச் சில முக்கியமான அறுவைச் சிகிச்சைகள் நடைபெறவில்லை.

வைத்தியர்கள், தாதிமார், முக்கிய உபகரணங்கள் பற்ருக்குறை காரணமாகவே இந்த அறுவைச் சிகிச்சைகள் நேற்றுத் தடைப்பட்டன என்று தெரியவருகிறது.

நேற்று 4 நோயாளர்களுக்கு அவசர அறுவைச் சிகிச்சை நடைபெறவிருந்ததாகவும் மேற்படி பற்ருக்குறை காரணமாக இது நடைபெறவில்லை என்றும் தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

25 ஸ்ரீ மேசிபேகுசன் டிராக்டர், பெட்டி, கலப்பை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஞானசேகரம், 28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 0361

கிளிநொச்சி கண்டி பிரதான வீதியிலிருந்து மேற்கே 3ம் கட்டையடி கனகபுரத்தில் ஐந்து ஏக்கர் மேட்டுக்காணி, கல்வீடு, கிணறு மற்றும் பலன் தரும் மா, பலா மரங்கள் ஆகியவற்றுடன். நீர்ப்பாய்ச்சல் வசதி கொண்ட ஒரு ஏக்கர் நெற்காணி. ரூபா நாற்பதினாயிரத்துக்குக்குறையாத விலைக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். விபரங்களுக்கு, திரு. சு. செ. மகாதேவா சட்டத்தரணி, புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம் அவர்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்புகொள்ளவும். 0360

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டிவீதி கச்சேரிக்கு அண்மையில் 3¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும், யோகசேகரம் 92, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 0354

## யாழ். மாநகரசபை அமயத் தொழிலாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள்

யாழ். மாநகர சபையின் மின்சார, நீர் வேலைப்பகுதிகளில் அமயத் தொழிலாளர் (தற்காலிக) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி 28-9-78. மேல் விபரங்களை மாநகரசபை விளம்பரப் பலகையில் பார்க்கவும்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
15-9-78. 0362

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ/இல/ஈடு/61

கனகநாயகம் கனகேஸ்வரன்,
இல. 61, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

—வழக்காளி

எதிராக

1. கணபதி நல்லதம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளை
2. நல்லதம்பி இரத்தினம்
3. நல்லதம்பி அருணகிரிநாதர்
4. நல்லதம்பி இராசேசந்திரம் எல்லோரும் றெயில் றோட், நாவலர் றோட்டின் கிளை

—எதிராளிகள்

எனக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈட்டு வழ/இல. 61ல் கொடுபட்ட கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஒக்ரோபர் (ஐப்பசி) மாதம் 16-ந் திகதி திங்கட்கிழமை (16-10-78) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 6280/-ம் மேலும் ரூபா 4000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1-4-1976 தொடக்கம் தீர்வைத் திகதி வரைக்கும் 12% வட்டியும் அதனபின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை கோட்டு வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 553/25 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை ''நட்டாடி தோட்டம்'' பரப்பு நில இலாச்சம் நாலு (4 Lms) குளி 17ம் இதில் உலாந்தா ரி. கந்தையாவின் 4993-ம் இலக்கப் படத்தில் லொட் (1) ஒன்று என்று காட்டப்பட்ட துண்டு பரப்பு நில இலாச்சம் 2 (2 Lms) குளி 8-5ம் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு றெயில் றோட், வடக்கு ஒழுங்கை, மேற்கு படத்தில் குறிக்கப்பட்ட லொட் (2) என்னும் ஆதனமும், கணபதி நல்லதம்பியின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு பொன்னம்பலம் கைம்பெண் பாக்கியத்தின் ஆதனம், இவ்வெல்லைப்படி இதடங்கலும் இன்னும் கிணற்றுப் பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

க. சரவணமுத்து
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்

451, நாவலர் றோட்
அரியாலை,
யாழ்ப்பாணம்.
4-9-78. 0365

## விசேட ஆணையாளர் அலுவலகம், வல்வெட்டித்துறை நகரம் வல்வெட்டித்துறை வரியிறுப்பாளர்களுக்கு பிரதான அறிவித்தல்

1978ம் ஆண்டு மூன்றும் கந்தாயத்திற்கான ஆதனவரி இம்மாதம் 29-09-1978ம் திகதி பிற்பகல் 12-30 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதன்பின் செலுத்தப்படாமல் இருக்கும் வரியின் மீது பத்து வீதம் பற்றுணைச் செலவாக அறவிடப்படும்.

இதுவரையுள்ள நிலுவைகளை உடனடியாகச் செலுத்தி உங்கள் ஆதனங்களை நடுக்கட்டல், விற்பனை செய்தல் ஆகிய விருப்பமற்ற நடவடிக்கைகளிலிருந்து தவிர்த்துக்கொள்ளவும்.

மேலும் சபையின் வெலியாத்து உத்தியோகத்தரிடம் ஆதன நிலுவைகளைச் செலுத்தும்போது உத்தியோக பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜீ. எஸ். கந்தசாமி,
விசேட ஆணையாளர்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.
12-09-1978 0358

## யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

## கேள்வி விண்ணப்பம்

யாழ்.மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வைத்தியசாலை (17, கண்டி வீதி) கட்டிடத்திற்கு பின் குறித்த வேலைக்கு கேள்வி மூலம் விண்ப்பங்கள் கோரப்படுகின்றன.

வெள்ளை அடித்தல் - மேல்யாடிக்கு உட்பக்கம் மெல்லிய பச்சை. கீழ்ப்பகுதிக்கு எமல்சன் ஓயில் பெயின்ற்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 5-10-'78.

விண்ணப்பப் படிவத்தின் மேலுறையின் இடது டக்கமேன் மூலையில் வேலைக்கான கேள்வி எழுதப்பட்டு பின் குறித்த விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

பதில்பொதுமுகாமையாளர்
74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978 செப்டெம்பர் 18. 0368

## வவுனியா நகரம் ஆதனவரி அறிவித்தல்

வவுனியா நகர நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல ஆதனங்களுக்கும் 1978-ம் ஆண்டு 3ம் கந்தாயத்திற்குரிய ஆதன வரி 29-09-78ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் வவுனியா நகர விசேட ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதனவரிப் பணத்திற்கு 10% வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

1978ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் திகதி வரையுள்ள ஆதனவரி நிலுவைகளை உடனடியாகச் செலுத்தி, நடுக்கட்டுதல், ஆதனங்களை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு வவுனியா நகர வரியிறுப்பாளர்கள் யாவரும் பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

ந. பாலசுப்பிரமணியம்
செயலாளர்,
வவுனியா நகரம்,
வவுனியா.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வவுனியா நகரம்,
வவுனியா,
12-09-1978. 0359

## கட்டிட ஏலவிற்பனை

எமதுசங்கத்தின் கோண்டாவில் விவசாயக் களஞ்சிய கட்டிடம் (கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோவிலடியிலுள்ள ஏறக்குறைய 100X30 சதுரஅடி விஸ்தீரணமுள்ள கட்டிடமும் அதிலுள்ள பொருத்திகளும்) 30-9-78 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மீளப்பெற்றுக் கொள்ளக்கூடிய வைப்புப்பணம் ரூபா 100/- செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்வோர் மாத்திரமே இவ் ஏலவிற்பனையில் பங்கு பெறலாம். ஏனைய விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
நல்லூர் ப.நோ.கூ. சங்கம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம் 0367

## தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அரசினர் வைத்தியசாலையில் மருந்துகட்டும் 'பண்டேஜ்' துணிவகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் காயங்களுக்கு மருந்து கட்டச் செல்லும் நோயாளர்கள் துணியை தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

## மானிப்பாய் - கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்,

## பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு பின்வரும் தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

### 1. லொறிச்சாரதி (தற்காலிகம்)

தகைமைகள்:

1. 8-ம் தரக் கல்வித் தகைமை
2. நல்ல உடனலம் உள்ளவராயும் லொறிச்சாரதிப் பதவியில் ஆகக் குறைந்தது5 வருட கால அனுபவமும்.
3. லொறி செலுத்துவதற்கு வேண்டிய தகைமைப் பத்திரம்.
4. 25 — 45 வயதுக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

### 2. லொறிக் காப்பாளர்: (தற்காலிகம் கிளீனர்)

தகைமைகள்

1. 8-ம் தரக் கல்வித் தகைமை
2. நல்ல உடனலம் இருத்தல் வேண்டும்.
3. 25 — 45 வயதுக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

சங்க எல்லைக்குள்வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தில் பூரணப்படுத்தி தகைமைப் பிரதிகளுடன் 30-9-78 திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
மானிப்பாய் - கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்.
18-9-78. 0366





சுமிட்டோமோ ரயர், ரியூப்

A/40, சோமசெட் கார்

உரிமையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி

இதோ மீண்டும் வந்துவிட்டது

5.25x16 ரயர் விலை ரூ. 570-00

5.25x16 ரியூப் விலை ரூ. 80-00

சிறிதளவு கையிருப்பு உண்டு

உங்கள் தேவைக்கு முந்துங்கள்

கிடைக்குமிடம்:

லிடன் ரேடர்ஸ்

சேகரம் கட்டிடம்

188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu

## தொழிற் பயிற்சி

தொழில் தெரிந்தவர்கள் பலரும் மத்தியகிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுவிடுவதால் இங்கு தொழில் தெரிந்தவர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும்தொழில் துறைகளில் பயிற்சி பெறுவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டுமென்றும் நிதி திட்டமிடல் பிரதிஅமைச்சர் ஜனுப் எம். எச். எம். நைனுமரைக்கார் ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

பட்டப்படிப்புப் படித்தவர்கள் சொகுசான உத்தியோகத்தை விரும்புகிறார்கள். தொழில்துறையில் பயிற்சி பெற்றவர்களோ வெளிநாடுகளில் வேலை தேடிச் சென்றுவிடுகிறார்கள். இந்நிலையில் பாடசாலைப் படிப்பை முடித்து வெளியேறுபவர்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெற வேண்டுமென்பது பிரதிஅமைச்சரின் அறிவுரை.

மத்தியகிழக்கு நாடுகளில் இப்போது தொழில் தெரிந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு நிறைய இருக்கிறது. நல்ல சம்பளமும் கிடைக்கிறது. இங்கு பத்து வருடங்கள் வேலை செய்து சம்பாதிக்கும் பணத்தை அங்கு சிலமாதங்கள் வேலைசெய்து சம்பாதித்துவிடலாமென்ற நம்பிக்கை பலரினது மனதிலும் தோன்றியுள்ளது.

இதனுல் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதை நீக்க வேண்டியது மிகமிக அவசியம்.

மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் நிறுவப்பட்டதும் மாவட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் தேவை.

தொழில்துறைகளில் இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

தொழில் முன்னிலைப் பாடம் என்று முன்னர் ஒரு திட்டம் கொண்டுவந்து அமுல் செய்யப்பட்டது. அது எந்த அளவுக்குப் பயனளித்திருக்கிறதென்று சொல்ல முடியாது. ஆனுலும் கல்வியுடன் ஒருமாணவன் தனக்கென ஒரு தொழிற்துறையையும் தெரிவு செய்து கொள்வதற்கு அது வழிகாட்டியது.

இப்போதும் பாடசாலைகளில் அந்தப் பாடசாலை அமைந்துள்ள சூழ்நிலைக்கேற்ப ஒரு தொழிலில் பயிற்சியளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களின் தட்டுப்பாட்டை நீக்க வழி பிறக்கும்.

பாடசாலைப் படிப்பை முடித்து வெளியேறி வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப்பயிற்சி அளிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தொழில்பயிற்சி நிலையங்களை நிறுவ முன்வர வேண்டும்.

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 4-ந் திகதி
புதன்கிழமை
(20-9-78)

**மேடம்:-** தனதானிய நஷ்டத்துடன் பூமிப் பிணக்கும் தோன்றக்கூடும், வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், கடமையாற்றும் இடத்தில் நிதானம் வேண்டும், மௌனம் நன்று.

**இடபம்:-** தனத்துடன் வாழ்வு இன்று தவருது கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு, நீண்டநாள் கடன் நிவர்த்தியாகும், வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

**மிதுனம்:-** ஆசைஅலைகளால் அவப் பெயருக்கும் இடமுண்டு, குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம், வீட்டில் சிறு பிணியும் தலைதூக்கும், பொறுமை நன்று.

**கடகம்:-** இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள், வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும், தாய்வழியால்தன வரவிற்கும் இடமுண்டு, குடும்பவாழ்க்கையில் சுமுகமான சூழ்நிலை தென்படும், நல்ல நாள்.

**சிங்கம்:-** புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல்வாதிகளுக்கும் ஆதாயம் கிடைக்கும், எடுத்த காரியத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள்.

**கன்னி:-** நம்பிக்கை மோசடி நடக்கும், வியாபாரத்துறையில் நஷ்டத்திற்கிடமுண்டு அதிக முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும், சிலருக்கு வாதரோகம் தென்படும், உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

**துலாம்:-** கன்னல்போல் இனிக்கும் வாழ்க்கை, காதலில் வெற்றியுண்டு, பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும், இல்லறத்தில் இணைப்புக்கள் இறுகும், இன்று சுப தினம்.

**விருச்சிகம்:-** எதிர்பாராத முனையிலிருந்து ஆபத்துக்கள் உருவாகும், உள்வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக்கூடும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

**தனுசு:-** பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள், பிதாவழித் தனமும் சேரும், தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும், பெரியோர்கள் ஆசி கூறுவார்கள், புகழும் சேரும்.

**மகரம்:-** கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும், இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும்.

**கும்பம்:-** நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும், பணவிவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும், சிறப்பான தினம்.

**மீனம்:-** தானியத்துறையில் நஷ்டமேற்படுவதற்கிடமுண்டு, கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டைகள் மூள முடியும், உடன் தொழிலாற்றுவோர் உளவுவேலையில் இறங்கக்கூடும், தெய்வநம்பிக்கை வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மணிவாக்கு

பிறரிடம் இருக்கும் எந்தக் குணத்தை நீங்கள் வெறுக்கிறீர்களோ அந்தக் குணத்தை அண்டவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். — ஸ்பிராட்.

### "ஈழவளர்ச்சிக்கு

# புரட்சிப்பொருளாதாரத் திட்டம் அவசியமானது"

## லண்டன் ஈழ ஆய்வு மாநாட்டில் தீர்மானம்

(லண்டன்)

''ஈழ வளர்ச்சிக்கு அவசியமானது புரட்சிப் பொருளாதாரத் திட்டமே என்னும் தீர்மானம் இங்கிலாந்திலுள்ள பிரபல கலைக்கூடங்களில் நடைபெற்ற ஈழ ஆய்வுமகாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று.

''இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு வேண்டியது அவர்கள் தம்நலனையும், நிலப் பிராந்தியத்தையும் பாதுகாத்து வளம்படுத்தக்கூடிய ஒரு புரட்சிகரமான பொருளாதாரத்திட்டமாகும். இத்திட்டம் தீர்க்கமான ஆய்வின் அடிப்படையில் அமைய வேண்டியது மட்டுமல்லாமல் அதைத் திறம்பட நடைமுறைப்படுத்த வேண்டிய சமூக பொருளாதார அமைப்பும் அதற்கான வசதிகளும் அவசியம். இதனை உருவாக்க வேண்டும்.''

ஈழத்தின் தேவைகளும் அதற்கான வளங்களும் என்ற ஆய்வின் முடிவில், அவ்வாய்வரங்கில் கருத்துத் தெரிவித்த நிபுணர்கள் யாவரதும் முடிவாக மேற்படி தீர்மானத்தைப் பொருளியல் நிபுணர் திரு. என். சிவநேசன் அவையேற்றினர். இந்த ஆய்வில் கலந்துகொண்ட ஏனைய நிபுணர்கள் திரு. ஏ. வைரமூர்த்தி திரு. ஞானசூரியம் ஆகியோராவர். மற்றும் பங்குபற்ருத பலருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. மூன்று நாட்கள் இவ்வாய்வரங்கு நடைபெற்றது.

இன்று இலங்கையில் எழுந்துள்ளநெருக்கடிகளுக்கு அடிப்படைக்காரணம் இனக்குரோதமா. அல்லது வர்க்கப் பிரச்சினையால் ஏற்படும் பாகுபாடா என்ற ஆய்வின்முடிவில் இலங்கையில் அடிப்படைப் பிரச்னை வர்க்கப்பிரச்னைதான். ஆனுல் இந்த வளர்க்கப் பிரச்னையின் முதுகெலும்பான இலங்கைத் தொழிலாளர்களில் பெரும்பாலோரான தோட்டத் தொழிலாளர்களை 'சாதி, மதம்' என்ற இனங்கண்டு இனக்குரோத அடிப்படையில் 1949 ஆம் ஆண்டு இரண்டாம்தர அடையாளமற்ற பிரஜைகளாக்கப்பட்டது முதல் இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும் செம்மையாக உருவாகஇருந்தவர்க்ப் பிரச்னையை இனக்குரோத அடிப்படையில் உருவெடுக்க விட்டமையால் இன்று இலங்கையில் இருக்கக்கூடியது வெறும் தேசிய பொருளாதார பிரச்னையன்றி தேசிய இனப்பிரச்னையாக உருவாகியுள்ளது. இப் பிரச்னைக்கு இரண்டுதேசிய இனங்களும்- அதாவது சிங்கள மொழி பேசும் தேசிய இனமும், தமிழ் மொழி பேசும் தேசிய இனமும்- தமக்கிடையே பரிணமித்துள்ள பிரச்னைகளை தேசிய அடிப்படையில் பரஸ்பரமாக தீர்க்க வேண்டும். ஆனுல் இன்று உலக ரீதியில் பார்க்கும்பொழுது ஏகாதிபத்திய நாடுகளும் அதற்கு அடிபணிந்துதவும் இலங்கை போன்ற நவகாலனித்துவநாடுகளும் பல்வேறு இனப்பிரச்னைகளை ஒருமைப் பாட்டுடன் தேசிய பொருளாதார அடிப்படையில் தீர்த்து வைக்கமுடியாது என்பது சரித்திர அனுபவம். ஆகவே எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்கள இனத்துக்கும் எண்ணிக்கையில் சிறுபான்மையான தமிழினத்துக்கும் எழுந்துள்ள பிரச்னை இனவாரி அடிப்படையிலே தீர்க்கப்படவேண்டியது தவிர்க்கமுடியாது ஒன்ருகும் என்ற தீர்மானத்தை மேற்படி ஆய்வில் பங்கு பங்குபற்றிய டாக்டர் சிறி பத்மநாதன், திரு. மகாஉத்தமன் ஆகியோர்ஆய்வின் முடிவாக அவையேற்றினுர்கள்.

### இலங்கைத் தொழிலாளர் பிரச்னை

இந்த ஆய்விற்கு லிபரேசன் பத்திரிகை ஆசிரியர் திரு. ரோஸ்கில்பேற் தலைமை தாங்கினர். அவரது உரையில் ''இலங்கைத் தமிழர்கள் பிரச்னை தனித்தன்மையான தாயாயினும் அது இன்று உலகத் தொழிலாளர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னையில் ஒரு பங்கு. இப்பிரச்னையில் ஏனைய நாட்டுத் தொழிலாளர்களை முக்கியமாக பெரிய பிரித்தானிய தொழிலாளர்களையும் அவர்கள் சார்ந்த தொழில் இயக்கத்தையும் அக்கறைகாட்டச் செய்யவேண்டும். இன்று இலங்கையில் அவதியுறும் மலையகத் தொழிலாளர்களின் நிலைமையை இவர்கள் புரியச் செய்யவேண்டும். இதற்கு இந்த அவையும் ஆராய்ச்சியாளர்களும் உதவவேண்டும்'' என்றுர்.

கடந்த பொதுத்தேர்தலின் மூலமும் பின்னரும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமது உரிமைக்கோரிக்கையை ஜனநாயக ரீதியில் விஞ்ஞாபனப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதற்காகப் போராடவும் ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் பிரச்னையை உலகறியச் செய்யவேண்டும். அதற்கு முதற்படியாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைப் பிரிவினரை அக்கறைகாட்டச் செய்ய வேண்டும். அதற்காக எதிர்வரும் யூலை மாதம் முதலாந்தேதி முதல் செப்டம்பர் வரை ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனிதஉரிமை மகாநாட்டில் பங்குபற்றும் ஏனைய மனிதஉரிமை கோருப் இனங்கள் மூலம் இலங்கைத் தமிழர்கள் தமது பிரச்னையை அறியபடுத்த வேண்டும்.

இத்தீர்மானம்மனித உரிமைகளும் சுயநிர்ணயமும் என்ற ஆய்வின் முதலில் வழக்கறிஞர் திரு. ஏ. ஆர். ஆசீர்வாதத்தினுல் அவையேற்றப்பட்டது.

### கார்டியன் நிருபர் கருத்து

இந்த ஆய்வில் பங்குபற்றியவர்களுள் முக்கியமானவர் லண்டன் கார்டியன் நிருபர் திரு. மார்டில் வாக்கர். இவர் பேசும் போது, 'உலக நாடுகளின் முக்கியமாக மேற்கத்தைய ஜனநாயக நாடுகள் இன்று இலங்கையிலுள்ள பிரச்சனையை ஒரு பொருளாதாரப் பிரச்சனையாகவே கருதுவார்கள். அப்படி கருதும்போது இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையை அணுகும் எந்த நாட்டவர்களும் இன்று ஜனுதிபதி ஜயவர்த்தனுவால் தமிழர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை வலுவாகக் கருதுவார்களேயன்றி, தமிழ் மக்களின் ஏக முடிவான இந் நாட்டுக் கோரிக்கையை அல்லது சுயநிர்ணயத்தையே ஆழ்ந்து நோக்க மாட்டார்கள். ஆனுல் இந்தப் பிரச்சனை தீரும்வரை இலங்கையில் தேசிய அமைதி இருக்க முடியாது. தேசியஅமைதி இல்லாத எந்நாட்டிலும் வெளிநாட்டவர்கள் முக்கியமாக முதலீடு செய்பவர்கள் அக்கறை செலுத்தமாட்டார்கள். எந்த விதத்திலும் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களே. இவர்களின் நலன்களில் அக்கறை காட்டக்கூடியவர்கள் வெளிநாடுகளில் வதியும் தமிழர்களேயாகும். வெளிநாடுகளில் வதியும் ஏனைய இனங்களைப் போல் இவர்களும் நல்ல முறையில் இயங்கி உலக நாடுகளின் நல்லெண்ணத்தையும் அபிலாஷையும் பெற்றுக் கொண்டால் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகள் சுமுகமாகத் தீர்க்கப்படும்.' என்ருர். இவரது ஆய்வுக்குப் பின் பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

ஈழம் என்பது இலங்கைத் தமிழர்களின் தாயகம், என்ற பிரேரணையை டாக்டர் ஆர். தயாபரன் முன்வைத்தார்.

### அகராதிகளில் இடம்பெறச் செய்யவேண்டும்

நாம் ஈழவர், நமதுமொழி தமிழ், நம்நாடு ஈழம் என்ற கோட்பாட்டை உலகில் பறைசாற்ற வேண்டும். அத்தோடு ஈழம், ஈழவர் என்ற பதங்களை ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் அகராதிகளிலும் மற்றும் உலகிலுள்ள கலைக் களஞ்சியங்களிலும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற பிரேரணையை வலியுறுத்தி ஆய்வு வழங்கிய லண்டன் முரசு ஆசிரியர் திரு. ச. ம. சதானந்தன் பேசினுர்.

### வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை ஒன்றுபடுத்தலாம்

'அரசியல், பொருளாதார கலை, ரீதியில் வெவ்வேறு நோக்குடன் இயங்கும் இயக்கங்களை ஒன்றுபடுத்த வெளிநாடுகளில் வாழும் 25000-க்கும் மேலான ஈழத்தமிழர்களை ஒன்று படுக்க ஆவன செய்ய வேண்டும் என்ற முயற்சியை முன்வைத்து ஈழ ஆராய்ச்சி மன்றத்தினரின் பொருளாளர் டாக்டர் இ. நித்தியானந்தன் பிரேரணை சமர்ப்பித்துப் பேசினுர்.

'இலங்கைத் தமிழர்களை பாரதூரமாக பாதிப்பது அரசாங்கத்தின் கட்டாயக் குடியேற்றத் திட்டம் இதைக் கண்மூடித்தனமாக கவனியாது இருந்து விடக்கூடாது. இதுபற்றி ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.' என்ற பிரேரணையை முன்வைத்து பிரபல பொறியியல் நீர்பாசன வல்லுநரும் ஸ்கொட் ஸ்தாபனத்தின் செயலாளருமான திரு. ஏ. வைரவமூர்த்தி பேசினுர்.

இறுதி நிகழ்ச்சியில் சிறப்புரை வழங்கிய ஆராய்சியாளர் திரு இ. இரத்தினசபாபதி, 'தேசிய ரீதியில் தமிழ் மக்கள் இன அடிப்படையில் ஒடுக்கப்பட்டாலும் நாம் சாதி அடிப்படையில் நம்முன்னே பலரைத் தாழ்த்துவதையும் பாதிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலைமை மாறுவதற்கு 'சமனும் சமானமும்' இல்லா அறிவு நிலை தரவேண்டும், பாரபரனே' என்ற நிலை உருவாக வேண்டுமென்ருர்.

அந்தநிலையை உருவாக்குவது விஞ்ஞானிகள் கடமை' என்று கூறினுர். (அ)

# மத்திய கிழக்கில் 30 ஆண்டு இரத்தக்களரி

# முடிவுக்கு வந்துவிட்டது

## காம்ப்டேவிட் மகாநாட்டு உடன்படிக்கை குறித்து எகிப்து-இஸ்ரேல் தலைவர்கள்

வாஷிங்டன், செப். 19

மத்திய கிழக்கில் 30 வருட காலமாக இடம்பெற்றுவந்த இரத்தக்களரி காம்ப் டேவிட் மகாநாட்டினுல் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தும் இஸ்ரேலியப் பிரதமர் திரு, பெகினும் தத்தமது நாட்டு மக்களுக்குத் தெரிவித்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியிலும் தொலைக் காட்சியிலும் ஜனுப் சதாத் மகாநாட்டு வெற்றி குறித்து எகிப்திய மக்களுக்கு செய்தி விடுத்தார்.

எகிப்திய மக்களை மீண்டும் யுத்த முனைக்கு அனுப்பாதவாறு தாம் இஸ்ரேலுடன் ஒரு நீதியான உடன்பாடு ஒன்றுக்கு வந்துள்ளதாகவும் ஜனுப் சதாத் தெரிவித்துள்ளார்.

### சதாத் ஒப்புக்கொண்டார்

எந்த விஷயத்திலும் கருத்து வேறுபாடு தவிர்க்கமுடியாதது தான் என்று கூறிய ஜனுப் சதாத், பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பேச்சுக்களில் கலந்துகொண்ட எகிப்திய வெளிநாட்டமைச்சர் ஜனுப் கமல் ராஜினுமாச் செய்தார் என்றும் ஒப்புக்கொண்டார்.

### சமாதானக்கனவு நனவாகிவிட்டது

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் வாஷிங்டனிலிருந்து இஸ்ரேலுக்கு தொலைபேசியில் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

மத்திய கிழக்கு அமைதி குறித்து நான் கொண்டிருந்த சமாதானக் கருத்து இப்போது நனவாகிவிட்டது.

காம்ப் டேவிட் மகாநாட்டினுல் உடன்பயன் ஏற்பட்டுவிடும் என்று எவரும் கருதிவிடக்கூடாது இன்னும் சிக்கல்கள் இருக்கவே செய்கின்றது எனினும் விரைவில் சிக்கல்கள் தீர்ந்துவிடும்.

சாம்ப் டேவிட் மகாநாட்டில் செய்யப்பட்ட சமாதான உடன்பாட்டுக்கமைய இஸ்ரேலிய யுத ராஜ்யத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. (இ)

# அதிபர் சதாத் இஸ்ரேலிடம்சரண்

## ரஷ்யா கருத்து

மாஸ்கோ, செப். 19

எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் இஸ்ரேலிடம் சரணுகதி அடைந்துவிட்டார்.

காம்ப டேவிட் மகாநாட்டு முடிவு குறித்து ரஷ்யா கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

அரபு நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட மாபெரும் சதியே காம்ப் டேவிட் மகாநாடு என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதேவேளையில் இம்மகாநாட்டு முடிவுக்கு எகிப்திலும் இஸ்ரேலும் பரஸ்பரம் எதிர்பபும் ஆதரவும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ)

### பாண்டிச்சேரி அ. இ. அ. தி. மு. க. ஆட்சியில்

# அதிருப்தி அடைந்த 5பேரில்

## 4 எம். எல். ஏக்கள் மீண்டும் ஆதரவு

### ஆட்சியைக்கலைக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் கோரிக்கை

புதுச்சேரி, செப். 19

பாண்டிச்சேரி அண்ணு திராவிடமுன்னேற்றக் கழக அரசில் அதிருப்தி கொண்டு தமது ஆதரவைக் கடந்தவாரம் விலக்கிக் கொண்ட ஐந்து அண்ணு தி. மு. க. சட்ட சபை உறுப்பினர்களில் நான்கு பேர் மீண்டும் தாம் அ. தி. மு. க. அமைச்சரவைக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளனர்.

தமது முடிவை இவர்கள் பாண்டிச்சேரி கவர்னருக்கு கடித மூலமும் பிரதமர், ஜனுதிபதி, உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு தந்தி மூலமும் தெரிவித்துள்ளனர்.

30 உறுப்பினர்களைக் கொண்ட பாண்டிச்சேரி சட்டசபையில் இவர்கள் நால்வருடனும் சேர்ந்து அ. தி. மு. க 16 இடங்களுடன் பெரும்பான்மை பலத்துடன் உள்ளது.

அதிருப்தியுற்றவர்களில் ஐந்தாவது உறுப்பினரான திரு. மணிமாறன் தமது நிலைபற்றித் தெரிவிக்கையில் கூறியதாவது:

### ஐந்தாவது எம். எல். ஏ. கருத்து

அதிருப்தியடைந்த சட்டசபை உறுப்பினர்களினது ஆதரவைப்பெற முதல் அமைச்சார் திரு. எஸ். இராமசாமி நிர்ப்பந்த வழிகளைப்பின்பற்றினுர் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டே நால்வரும் மீண்டும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

### எதிர்க்கட்சித் தலைவர் பிரதமருக்கு தந்தி

முதல்வர் திரு. இராமசாமி அதிருப்தி அடைந்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு நேர்மையற்ற முறைகளைக் கடைப்பிடித்தார் என்று குற்றம் சாட்டியுள்ள, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அன்சாரி துரைசுவாமி பாண்டிச்சேரி ஆட்யையைக் கலைக்குமாறு மத்திசி அரசையும் ஜனுதிபதியையும் தந்தி மூலம் கேட்டுள்ளார் (இ)

## 20 ஆயிரம் பூகம்பங்கள்

### ஈரான் எதிர்நோக்குகிறது

தெஹ்ரான், செப. 19

ஈரான் 20 ஆயிரம் பூகம்பங்களை எதிர்நோக்கியுள்ளது என்றும் .எதிர்நோக்கும் பூகம்பங்களில் படுமோசமான 20 பூகம்பங்களில் கடந்த சனியன்று நிகழ்ந்த பூகம்பமும் ஒன்று என்றும் தெஹ்ரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

சனியன்று நிகழ்ந்த பூகம்பத்தினுல் தபஸ் நகரில் பாரிய கட்டிடங்களுடன் அங்கு செழித்துவளரும் பேரீந்து, அபபிள், தோடை ஆகிய பழமரங்களும் முற்ருக அழிந்து சுடுகாடுபோல்காட்சியளித்துக் கொண்டிருபபதாக சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## ஒரு நிமிட பூகம்பத்தில்...

தெஹ்ரான், செப. 19

ஈரானில் ஒரு நிமிடம் மட்டுமே நீடித்த பயங்கர பூகம்பம் 15 ஆயிரம் பேரைப் பலி கொண்டது என்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இபபூகம்பத்தினுல் 20 ஆயிரம் பேர்வரை இறந்திருக்கலாம் என்றும் இன்னும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

இதுவரை இடிபாடுகளுக்குள்ளிலிருந்து 3 ஆயிரம் சடலங்கள் மட்டுமே மீட்கபபட்டுள்ளன.

இராணுவமும் பொதுமக்களும் மீட்புப பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றனர். (இ)

## ஜெட்டி வாசஸ்தலம் இடியும் நிலை

புதுடில்லி, செப். 19

பாரத உப-ஜனுதிபதி திரு. பி. டி. ஜெட்டி தமது அலுவலக வாசஸ்தலத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலையிலிருக்கிருர்.

தொடர்ந்து பெய்துவரும் பெருமழையால் அவரது வாசஸ்தலம் இடிந்துவிடும் நிலையேற்பட்டுள்ளது.

தம்முடன் வந்து ராஷ்டிரபதிபவனில் தங்குமாறு ஜனுதிபதி திரு.நீலம் சஞ்சீவரெட்டி, ஜெட்டியை அழைத்துள்ளார்.

## பருத்தித்துறைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம கச்சேரிப் பதிவுகாரர் திரு. இளைய தமபி கதிர்காமலிங்கம் இன்று முதல் பருத்தித்துறை காணிப் பதிவுகாரராகவும் மாவட்டப் பதிவுகாரரரகவும நியமனம் பெற்றுள்ளார்.



# தமிழ்மொழிக்கு தனியான பல்கலைக்கழகம்

## எம். ஜி. ஆர். அரசு ஆலோசனை

சென்னை, செப் 19

தமிழ் மொழிக்கென தனியானதொரு பல்கலைக் கழகம் தமிழகத்தில் அமைக்ககூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ் நெஞ்சங்களுக்கு இனிக்கும் இத்தகவலை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வெளியிட்டுள்ளார்.

தமிழ்மொழிக்கென தனிப் பல்கலைக்கழகம் அமைக்கும் ஆலோசனை தமது அரசுக்கு உண்டென்று முதல்வர் நேற்று அறிவித்தார்.

### மொழி ஆராய்ச்சி

இப்பல்கலைக் கழகத்தில் மொழி, இலக்கிய ஆராய்ச்சிகள் இடம்பெறும்.

தமிழிலக்கியங்களை வேற்று மொழியில் வெளியிடுவது வேற்று மொழியின் தரமான படைப்புகளைத் தமிழில் வெளியிடுவதற்குமாக இப்பல்கலைக் கழகம் செயற்படும்.

### குறிக்கோள்

தமிழ்மொழி வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு எழவிருக்கும் இப்பல்கலைக் கழகத்திற்கு அறிஞர்களின் ஒத்துழைப்பு நாடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மொழி ஆராய்ச்சிக்கென முதல்வர் திரு. எம். ஜி. ஆர். கமிட்டி ஒன்றினை ஏற்கனவே நியமித்துள்ளார். கர்மவீரர் காமராஜர் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்துக்குச் சூட்டி கர்மவீரருக்கு முதல்வர் கௌரவம் அளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

---

## ஆசிரியர்கள் லீவு ரத்து

(கொழும்பு)

இம்மாதம் 28-ம் திகதி சகல ஆசிரியர்களினதும் லீவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று பதில் கல்வி அமைச்சர் திரு. லயனல் ஜயதிலகா தெரிவித்துள்ளார்.

28-ம் திகதி பாடசாலைக்கு வராத ஆசிரியர்கள் சகலரும் வேலைஇழந்தவர்களாகக் கருதப்படுபவர் என்றும் திரு. ஜயதிலகா தெரிவித்துள்ளார். (இ)

## கோவூர் காலமானர்

(கொழும்பு)

இலங்கைப் பகுத்தறிவாளர் சங்கத் தலைவர் டாக்டர் ஏபிரகாம் கோவூர் நேற்றிரவு கொழும்பில் உள்ள இல்லத்தில் தமது 82-வது வயதில் காலமானர்.

## எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பர்மிட் இல்லாமல் மரம் கொண்டு சென்றதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவனியா நீதிமன்றத்தல் நீதிபதி டபிள்யூ. ஜி. என். வீரரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் லொறி சாரதி முத்துராசா, கிளினர் செல்வநாயகம் ஆகியோர்மீது பர்மிட் இல்லாமல் 17 சற்றின் மரம் கொண்டு சென்றதாக குற்றம சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். பிரிவு காட்டு இலாகா உத்தியோகத்தர் எஸ். டொமனிக் வழக்கை நடத்தினர்.

காட்டு இலாகா உத்தியோகத்தர்கள் கிறிஸ்தோபர், மனோகரன், இன்ஸ்பெக்டர் விமலசேன, சாரஜன்ட்பாருக் ஆகியோர் சாட்சியமளித்தனர், [க-உ]

## வட்டு. தொகுதி வேலை வங்கி படிவம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் வேலை வங்கி மூலம் தொழில் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கான இறுதியான வேலை வங்கிப் படிவங்கள் இம்மாதம் 15ம் திகதி தொடக்கம் சங்கானை கலாச்சார மண்டபத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 21ம் திகதிவரை வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள 15 கூட்டணிக் கிளைகள் மூலம் சிபார்சு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு இந்த வேலை வங்கிப்படிவங்கள் வழங்கப்படுகின்றன.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா திருநாவுக்கரசு சுகவீனமுற்று இருப்பதால் அவருக்குப் பதிலாக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இவ் வேலைவங்கிப் படிவங்கள் வழங்குவதை மேற்பார்வை செய்துவருகின்றார். வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி மத்திய அலுவலக ஊழியர்களும், வட்டு எம. பி.யின் செயலாளர் திரு. நாக. பத்மநாதனும், உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர்கள் ஆகியோரும் இவ்வேலை வங்கிப் படிவங்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

## "புதிய அரசியலமைப்பு தமிழருக்கு ஆபத்தானது"

[யாழ்ப்பாணம்]

"72ம் ஆண்டின் அரசியலமைப்பிலும் பார்க்க புதிய அரசியலமைப்பு தமிழருக்கு மிக ஆபத்தானது. போதன மொழி தேசிய மொழிகளில் ஒன்ருக இருக்கலாம் என 21ம் சரத்து கூறுகிறது. தாய் மொழியே போதன மொழியாக இருக்க வேண்டும்."

துன்னலை தெற்கில் நடந்த தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் நடந்த கருத்தரங்கில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: உத்தியோக வாய்ப்பை விரும்பும் தமிழரும், தெற்கில் வாழும் தமிழரும் புதிய அரசியலமைப்புப்படி, தேசிய மொழிகளில் ஒன்றுன சிங்களத்தையே போதனமொழியாக்கும் ஆபத்துள்ளது.

1972ம் ஆண்டு அரசியல் அமைப்பு திட்டத்தை அவசரகாலச் சட்டம் இருந்தபோதே கூட்டணியினர் எதிர்த்து தீயிட்டனர். ஆனல் இன்று அவசரகாலச் சட்டம் இல்லாதிருந்தும், அவர்கள் எதிர்ப்புக் காட்டாமல் இருக்கின்றனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் நீதிமன்ற மொழி தமிழாகவே இருந்துவந்தது. தமிழ்ப்பகுதிகளில் சில மாவட்டங்களில், பிரமாணம் மூலம் சிங்களம் புகுத்தப்பட்டுள்ளது. இதனல் நீதிமன்றங்களில் தமிழ் மொழி பாவிக்கும் கட்டாயம் இல்லாமல் போய்விடும். ஆங்கிலத்தையும், உத்தியோக ரீதியில் நீதிமன்றங்களில் புகுத்தியுள்ளனர் இது தமிழினத்திற்கு ஆபத்தானது.

கூட்டணியினர் மறைமுகமாக அரசுக்கு கொடுத்துவரும் ஆதரவினலேயே இதுநடந்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் திரு ரி. சங்கரப்பிள்ளை, திரு மகேந்திரராசா ஆகியோரும் பேசினர்கள். (க)

## பண்டத்தரிப்பில் இன்று கலைவிழா

[யாழ்ப்பாணம]

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக் கலைவிழா இன்றுமாலை நடைபெறுகிறது. பெற்ருர் ஆசிரியர் சங்கத்தினல் நடத்தப்படும் இக்கலைவிழா கல்லூரி அரங்கில் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நிகழும். வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விழாவில் நடன நிகழ்ச்சிகள், இன்னிசைவிருந்து, ஆசிரியர்களின் நாடகம், மற்றும நாட்டிய நாடகம் முதலான நிகழ்ச்சிகள் இடம் பெறும. விழா முடிவில் விசேஷ பஸ் போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது விழா மலரும வெளியிடப்படும். ]அ]

## இன்று

(விசுவமடு)

விசுவமடு விநாயகராலய கும்பாபிஷேக இறுதி பதினைந்தாவது தினமான இன்று புதன்கிழமை இரவு மகா சங்காபிஷேகம் நடைபெறும். இரவு சிவத்தமிழ் செல்வி துர்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி 'விநாயகர் வழிபாடு' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவர். நாதஸ்வர தவில் கச்சேரியும், சங்கீத இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## சிரமதானம்

(அராலி)

புதிதாகப் பதிவுபெற்ற அராலி கிராவொல்லை கிராம பிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அராலி பெரியகுளம் சுத்தஞ்செய்யும் சிரமதான வேலையை ஆரம்பித்துள்ளனர். ஐம்பது வாலிபர்கள் இவ்வேலையிலீடுபட்டனர். வேலையை தொழிலதிபர் திரு. க. கனகராசா ஆரம்பித்துவைத்தார்.

சிரமதான வேலை தொடர்ந்து நடைபெறுமென சங்கத் தலைவர் திரு. க. மாசிலாமணி தெரிவித்தார்.

## இளைஞர் வட்ட விழா

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி இளைஞர் வட்டத்தின் அரையாண்டு நிறைவுவிழா இம்மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி சிறுகதைப்போட்டி, நாடகப் போட்டி, கர்நாடக மெல்லிசைப் போட்டி என்பனவும் சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, உதைபந்தாட்டப்போட்டி ஆகிய போட்டிகள் உட்பட மேறு பல போட்டிகளும் நடைபெறவுள்ளன. (உ)

## திருப்பம்

புதுடில்லி, செப். 19

பில்லா, ரங்கா என்ற இரு பயங்கரக் கொலைகள் சம்பந்தப்பட்ட பொலிஸ் விசாரணையில் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

சோப்ரா என்ற அதிகாரியின் கீதா, சஞ்சேய் என்ற இரு பிள்ளைகளில் யாரை இவர்கள் முதலில் கொன்ருர்கள் என்ற விடயத்தில் புலன்விசாரணைகள் திருப்பமடைந்துள்ளன. (உ)

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Born Black
(Adults Only)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ராமன் தேடிய சீதை

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
கணவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 p. m.
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adults only)

ராணி (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
சாந்தி

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் இன்றுமட்டும்
சிவகுமார்-விஜயகுமார்
ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - தேவிகா
ஆண்டவன் கட்டளை
புதிய பிரதி

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - எஸ்.எஸ்.ஆர். விஜயகுமாரி
குங்குமம் (புதிய பிரதி)
25 முதல் ஜெய்சங்கர் நீலகிரி எக்ஸ்பிரஸ் (புதிய பிரதி)

‘பணம் -- பருவமங்கை -- கொலை’

# மொட்டைக்கடித நாயகர்கள் நடத்திமுடித்த ‘சிக்காக்கோ நாடகம்!’

## இருஇளைஞர்கள் பொலிஸ் விருந்தாளிகளானுர்கள்

(யாழ்ப்பாணம்)

''ஐயாயிரம் ரூபா பணம் தரவேண்டும் அல்லது பருவ மகள் கடத்திக்கொலைசெய்யப்படுவார்'' என்று பருத்தித்துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவருக்கு மொட்டைக் கடிதம் எழுதியது தொடர்பாக இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுவாரஸ்யமான கடத்தல் பயமுறுத்தல் மொட்டைக்கடிதம் சம்பந்தமாக சந்தேகத்தின்மீது கல்லூரி மாணவர் (வயது 14) ஒருவரும் வேலையற்ற வாலிபரான மற்ருெருவரும் (வயது 21) கைதுசெய்யப் பட்டுள்ளனர். இவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்.

கடந்த 11ம் திகதி பருத்தித்துறையைச் சேர்ந்த குறிப்பிட்ட பிரமுகருக்கு மேற்படி மொட்டைக் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததாம்.

இக்கடிதத்தில் தங்களுக்கு 5000 ரூபா தேவையென்றும், அதனை குறிப்பிட்ட ஒரு இடத்தில்வைக்கும்படியும், பணம் வைப்பதாக இருந்தால் அவரது வீட்டு மேல்மாடியில் பச்சை வெளிச்சம் அடையாளம் வைக்கும்படியும், இது தவறும் பட்சத்தில் அவரது பருவமகள் கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்படுவாள் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்ததாம்.

பொலிசாரின் உதவியைப் பெற்ற அப்பிரமுகர் 'மொட்டைக் கடிதநாயகர்' களின் கோரிக்கைக்கு இணக்கம்காட்டும் 'நாடகத்தை' சென்ற 17ம் திகதி நடத்தினராம்.

அதன் விளைவு உதயகுமார் பருத்தித்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டவர்வாயிலாகப்பெறப்பட்ட தகவலின்பேரில் வி- சந்திரமோகன் என்ற இளைஞரும் கைதுசெய்யப்பட்டார்.

பருத்தித்துறைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஜெயசேகரா, உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நந்தலால் ஆகியோருடன் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இந்த மொட்டைக் கடித நாயகர்களைச் சாதுரியமாகக் கைது செய்தனர். (கா-கூ)

# ஓவியர் சந்திரதாஸனுக்கு கிடைத்த பாராட்டு

## உதவியளிக்க ஜனுதிபதி விருப்பம்

(கொழும்பு)

''புலனிழந்தவர்கள் தமது திறமையில் முன்னேற்றமடைவதற்கு எவ்வித இன, மத, சாதி வேறுபாடுகளின்றிஉதவி செய்வது ஒரு அரசின் கடமையாகும்.''

கொழும்பு கலாபவனத்தில் வேலணையைச் சேர்ந்த கந்தையா சந்திரதாசின். தனிநபர் சித்திரக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய ஜனுதிபதிஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினுர்.

அரசாங்கம் இயற்கையைப் போன்று எல்லோரையும் ஒரே மாதிரி நடாத்தவேண்டுமென்றும் அப்படியான அரசைத்தான் இலங்கையில் உருவாக்க விரும்புவதாகவும், ஜனுதிபதி மேலும் கூறினுர்.

ஜனுதிபதி ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது.

''இந்த இளைஞரின் தனிநபர் கண்காட்சியைத் திறந்து வைக்க என்னை அழைத்த போது, அவர் செவிப்புலன், பேசும்புலன் அற்றவர் என்பதால் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

''இயற்கை எல்லோரையும் சமமாகவே நடாத்துகிறது. அது ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலா, வசதி குறைந்தவர், கூடியவர்களுக்கிடையே எவ்வித வித்தியாசமும் காட்டுவதில்லை,''

''ஈரானில் நடந்த பூமி அதிர்ச்சியில், ஆயிரக்கணக்கானேர் பலியானுர்கள் என்று அறிகிறேம். அப்பாவி மனிதர்கள் நல்லபிரஜைகள், தூயவர்கள் அருகருகே மாண்டிருக்கின்றனர். அதிர்ஷ்டவசமாக இலங்கை இயற்கையின் சீற்றத்திற்கு சிறிதளவில்தான் இடமாகிறது. இயற்கையல்ல மனிதன்தான் இன, மத அடிப்படையில் பாகுபாட்டை ஏற்படுத்தி, சமூகத்திற்குத் துன்பத்தைக் கொடுக்கிறுன்.

''சந்திரதாஸ் போன்றஇளைஞர்களுக்கு எல்லாவித உற்சாகமும் அளிக்கவேண்டும். இந்த இளம் கலைஞருக்கு நான் தேவையான உதவியளிக்கத் தயாராகஇருக்கிறேன். என்ன விதத்தில் இவருக்கு உதவி செய்யலாம் என்பதையிட்டு கலாச்சார அமைச்சு ஆலோசனை வழங்கலாம்.''

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு, எம். சிவசிதம்பரம் கூறியதாவது:

''கொழும்பு கலாபவனத்தில் வடபகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனிநபர்கண்காட்சியை நடாத்துவது பெரும் சாதனையாகும். ஜனுதிபதியைக்கொண்டு இக்கண்காட்சியைத் திறந்துவைத்தது அதிலும் பார்க்க பெரும் சாதனையாகும்.

யாழ்ப்பாண மாவட்ட கலாச்சார மன்றத் தலைவரும் அரசாங்க அதிபருமான திரு. யோனல் பெர்னுண்டோவினமுயற்சியினுல் இச்சித்திரக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. (க)

# பெரியார் பெயரில் மாவட்டம் பல்கலைக்கழகம்

## தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, செப். 19

தமிழ்நாட்டில் ஜாதிகளின் பெயரால் உள்ள வீதிகளின் பெயர்கள் மாற்றஞ்செய்யப்படும்.

தமிழக அரசின் இம்முடிவை முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று அறிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஈரோடு மாவட்டத்திற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டப்படுமென்றும், பெரியார் பெயரில் பல்கலைக்கழகமொன்று கோயம்புத்தூரில் நிறுவப்படுமென்றும் தெரிவித்த தமிழகமுதல்வர், பெரியார் விரும்பிய எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறதென்றும், அதனடிப்படையில் அகராதி திருத்தப்படுமென்றும் கூறினுர்.

## யானைகள் அட்டகாசம்

விசுவமடுக் கிராமத்தில் சென்ற சில நாட்களாக கூட்டம் கூட்டமாக யானைகள் வழைதோட்டம், தென்னை மரங்கள் ஆகியவற்றை அழித்து வருகின்றன.

## வீரமணி இங்கு வருகிருர்

(வெள்ளவத்தை)

கலைஞர் கருணுநிதி பொதுப்பணி மன்றத்தனரின் அழைப்பை ஏற்று இம்மாதம் 24ந் திகதி, ஈ. வே. ரா. பெரியாரின் சீடரும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளருமான கடலூர் வீரமணி இலங்கை வருகிருர்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் ஈ. வே. ரா. பெரியாரின் நூற்ருண்டு விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவதுடன், யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொள்வார்.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

ஹங்குரான்கெட்ட மகா வித்தியாலய வளவில் இழுக்கப்பட்ட 680வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

**09 K 0174**

ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு

**07 S 0447**

ரூபா 40,000

மூன்ருவது பரிசு

**31 V 0845**

ரூபா 10,000

தலா ரூபா 1,672,65 பெறும் 100 ஆறுதல் பரிசுகள்.

| | |
|---|---|
| 03 A 0948 | 30 A 0445 |
| 16 A 0112 | 20 A 0894 |
| 27 B 0543 | 27 B 0724 |
| 11 B 0312 | 26 B 0079 |
| 28 C 0839 | 20 C 0466 |
| 29 C 0211 | 24 C 0575 |
| 17 D 0965 | 31 D 0126 |
| 26 D 0078 | 25 E 0703 |
| 26 E 0604 | 13 E 0758 |
| 07 E 0934 | 07 F 0029 |
| 29 F 0705 | 29 F 0316 |
| 03 G 0208 | 25 G 0897 |
| 15 H 0177 | 10 H 0574 |
| 10 K 0190 | |
| 18 K 0958 | 19 K 0614 |
| 16 K 0244 | 20 L 0441 |
| 30 L 0786 | 30 L 0276 |
| 16 L 0829 | 11 L 0015 |
| 10 L 0542 | 05 M 0953 |
| 32 M 0358 | 04 M 0096 |
| 33 M 0627 | 14 M 0191 |
| 25 M 0617 | 09 M 0829 |
| 06 M 0241 | 27 N 0391 |
| 31 N 0450 | 13 N 0115 |
| 31 N 0894 | 17 N 0489 |
| 12 N 0051 | |
| 21 N 0816 | 29 O 0421 |
| 16 O 0066 | 14 P 0590 |
| 03 P 0812 | 07 P 0801 |
| 25 P 0686 | 26 P 0827 |
| 13 P 0659 | 18 Q 0474 |
| 12 Q 0799 | 09 Q 0111 |
| 09 Q 0679 | 09 Q 0679 |
| 19 Q 0908 | 06 R 0346 |
| 14 R 0618 | 05 R 0953 |
| 29 R 0369 | 17 R 0698 |
| 02 R 0420 | 25 S 0576 |
| 11 T 0874 | 14 T 0953 |
| 11 T 0591 | 03 T 0049 |
| 06 T 0529 | 11 T 0183 |
| 32 U 0434 | 27 U 0971 |
| 19 U 0499 | 26 U 0778 |
| 10 U 0976 | 15 V 0296 |
| 09 V 0421 | 13 V 0571 |
| 11 V 0757 | 05 V 0621 |
| 25 V 0055 | 15 W 0212 |
| 07 W 0068 | 24 W 0824 |
| 11 X 0764 | 12 X 0959 |
| 11 X 0374 | 30 X 0165 |
| 24 Y 0673 | 14 Y 0534 |
| 20 Y 0806 | 11 Z 0340 |
| 26 Z 0637 | 20 Z 0637 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## கொக்குவில் கொள்ளை வழக்கு

# முதல் வாக்குமூலத்தை வழங்க நீதிபதி கட்டளை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சந்தி துப்பாக்கிக்கொள்ளை வழக்கு நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் எதிரிகளான 5 தமிழ் இளைஞர்களும் ஆஜராஞர்கள்.

இவ்வழக்கில் கடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி குலநாயகம் என்பவரின் வீட்டில் இரட்டைக்குழல் துப்பாக்கியைக் கொள்ளையடித்து ஜீப்பில் வைத்திருந்ததாக ஜெயக்குமார், கு. சுந்தரலிங்கம், வி. பாஸ்கரன், அந்தோனிப்பிள்ளை, எஸ். ரவீந்திரன் ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி சிவசிறீதரன், சட்டத்தரணி கே. திருநாவுக்கரசு ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராஞர் 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும், 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சிவசிறீதரனும், 5ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

சந்தேகநபர்கள் துப்பாக்கியுடன் ஜீப்பில் வந்தபோது கொக்குவில் சந்தியில் கடற்படையினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டதாக பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடற்படை அதிகாரிகள் எதிரிகளைக் கைதுசெய்தபின் பொலிஸாருக்குஅளித்தவாக்குமூலமும், குலநாயகம், திருமதி குலநாயகம் ஆகியோரின் வாக்குமூலமும், எது முதல் வாக்குமூலமோ அதனைத் தமக்கு வழங்குமாறு திரு. பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.

எது முதல் வாக்குமூலமோ அதனைக் கொடுக்கும்படி நீதிபதி பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

சாட்சிகளின் வாக்குமூலத்தை தமக்கு வழங்குமாறு சட்டத்தரணி சிவசிறீதரனும் தமக்கு எந்த வாக்குமூலம் உரியதோ அதனை வழங்குமாறு சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும் கேட்டுக்கொண்டனர்.

சம்பவம்பற்றி சட்டத்தரணி ரி. தம்பிரத்தினம் நீதிபதியிடம் எடுத்துக்கூறினுர். நீதிபதி விசாரணையை 1979 ஜனவரி 16ம் தேதிக்கு ஒத்திவைத்தார், (க(

# மாண்டவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கையர் பற்றி...

பூகம்பத்திஞல் பாதிக்கப்பட்ட தபாஸ் நகரில் இலங்கையர் எவரும் இருந்தனரா என்பற்றி நேற்றுவரை தகவல் கிடைக்கவில்லை. ஆனுல் இந்திய வானெலி நேற்று ஒலிபரப்பிய தனது செய்தி அறிக்கையில், இந்திய டாக்டர்கள் பத்திரமாகஇருப்பதாகதெரிவித்தது.

தபாஸ் நகரம், ஈரான் தலைநகரான தெஹ்ரானிலிருந்து 430 மைல் தூரத்திலுள்ளது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

கண்ணீர்ப்புகைக்குண்டு வீசியதாகக் கருதப்படும் இளைஞர் பொலிசாருக்கு அளித்தவாககுமூலத்தில் தமிழ்த் தலைவர்களின் வேகம் காணுதென்பதை உலக அரங்கின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகவே கண்ணீர்ப்புகைக்குண்டு வீசியதாக ஒப்புக்கொண்டதாக அறியப்படுகிறது.

சம்பந்தப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர் என்று பொலிஸ்விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (கெ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணுர்பண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் சகஸ்ரநாம சங்காபிஷேகம் இன்று பகல் 11-00 மணிக்கு நடைபெறும். (கெ)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா நாகலிங்கம்

யாழ்ப்பாணம் 19ம் இலக்க ஐயஞர் வீதியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா நாகலிங்கம் காலமானுர் இவர் காலஞ்சென்ற ஆசிரியர் நாகலிங்கத்தின் மனைவியும், நடராசா, தங்கம்மா, மகேசன், ஆகியோரின் தாயாரும் அன்னரத்தினம், சாவித்திரி, காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், சுந்தரலிங்கம், கௌசலா, வக்சலா, பரிமளாகாந்தி, சுபத்திராதேவி, ரமணி, சியாமளாதேவி ஆகியோரின் பேத்தியாருமாவார். அன்னரது ஈமைக்கிரியைகள் இன்று (20-9-78)மாலை 4-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். 0371

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389 Registered as a Newspaper in Srilanka